வருகிறது. மல்லிகுண்டம் துணை சுகாதார நிலையத்திற்கு 39 இலட்சம் ரூபாய் செலவில் கட்டடம் கட்டப்பட்டு வருகிறது. கூனாண்டியூரில் 27 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்ட கட்டடம் திறந்து வைக்கப்பட்டிருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 28, மாண்புமிகு உறுப்பினர் திரு.* K.A. *பாண்டியன், மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

28—

சார்—பதிவாளர் அலுவலகக் கட்டடம்

***15168—திரு. K.A. பாண்டியன்:**

மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிதம்பரம் தொகுதி, சிதம்பரம் நகரில் உள்ள சார்—பதிவாளர் அலுவலகத்திற்குக் கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. பி. மூர்த்தி, வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) சிதம்பரம் நகரிலுள்ள ஒருங்கிணைந்த பதிவுத் துறை அலுவலக வளாகத்தில் மாவட்டப் பதிவாளர் நிருவாக அலுவலகம், மாவட்டப் பதிவாளர் (தணிக்கை) அலுவலகம் மற்றும் 1 ஆம் எண் இணை சார்—பதிவாளர் அலுவலகம் ஆகிய அலுவலகங்கள் இயங்கி வருகின்றன. இவ்வலுவலகக் கட்டடம் 114 ஆண்டுகள் பழமையானது. இதுபோன்று பழமையான கட்டடங்களில் பல பதிவுத் துறை அலுவலகங்கள் இயங்கி வருவதை அறிந்துதான், கடந்த சட்டமன்றக் கூட்டத்தொடரில் 100 ஆண்டுகளுக்கும் மேலான பழமையான கட்டடங்கள் புதுப்பிக்கப்படும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்டது. அந்த அறிவிப்பின் அடிப்படையில், தற்போது உறுப்பினர் அவர்களால் கேட்கப்படும் இந்தக் கட்டடம் தேர்ந்தெடுக்கப்பட்டு, அதனைப் புதுப்பிக்கும் நடவடிக்கையும் எடுக்கப்பட்டு வருகிறது. பழைய கட்டடத்தை அகற்றி, புதிய

கட்டடம் கட்டுவதற்காக சுமார் 5.72 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. பதிவிற்கு வரும் பொது மக்களுக்காக நவீன வசதிகளுடன்கூடிய புதிய கட்டடத்தைக் கட்டுவதற்காக திருத்திய மதிப்பீடு கோரப்பட்டுள்ளது. விரைவில் பணிகள் தொடங்கப்பட்டு, புதிய கட்டடம் கட்டி முடிக்கப்படும் என்பதனை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. K.A. பாண்டியன் அவர்கள்.

திரு. K.A. பாண்டியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிதம்பரம் சட்டமன்றத் தொகுதி, சிதம்பரம் நகரில் 1870 ஆம் ஆண்டு முதல் சார்—பதிவாளர் அலுவலகம் செயல்பட்டு வருகிறது. இந்த அலுவலகக் கட்டடம் ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் கட்டி முடிக்கப்பட்டு, சுமார் 114 ஆண்டுகளுக்கு மேல் செயல்பாட்டில் உள்ளது. எனவே, புதிய சார்–பதிவாளர் அலுவலகத்தை விரைந்து கட்டித்தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டு, அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. மூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூடிய விரைவில் tender கோரப்பட்டு, பணி துவங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 29, மாண்புமிகு உறுப்பினர் திரு. T.K. அமுல் கந்தசாமி அவர்கள். மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. K.A. பாண்டியன், சொல்லுங்கள்.

திரு. K.A. பாண்டியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது சிதம்பரம் சட்டமன்றத் தொகுதி, பரங்கிப்பேட்டை ஊராட்சிப் பகுதியில் சுமார் 125 ஆண்டுகளுக்கு முன்னர் கட்டப்பட்ட கட்டடத்தில் சார்–பதிவாளர் அலுவலகம் செயல்பட்டு வருகிறது. இந்தச் சார்–பதிவாளர் அலுவலகத்தை சுமார் 20–க்கும் மேற்பட்ட கிராமங்கள் மற்றும் இரண்டு

2023 ஜனவரி 13]

பேரூராட்சிகளைச் சேர்ந்த பொதுமக்கள் அனைத்து விதமான பதிவுப் பணிகளுக்காகப் பயன்படுத்தி வருகின்றனர். 125 ஆண்டுகளைக் கடந்து செயல்பட்டு வரும் பரங்கிப்பேட்டை சார்–பதிவாளர் அலுவலகக் கட்டடத்தையும் தாங்கள் கவனத்தில்கொண்டு, கட்டித்தர வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டு, அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி. மூர்த்தி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் 100 ஆண்டுகளுக்கும் மேலான கட்டடங்கள் ஏறத்தாழ 150 இருக்கின்றன. இந்த ஆண்டு 50 கட்டடங்கள் கட்டுவதற்கு எடுக்கப்பட்டிருக்கின்றன. அதிலே 28 கட்டடங்களுக்கான* estimate *பொதுப் பணித் துறைமூலம் இன்றைக்கு பெறப்பட்டிருக்கிறது. மீதமுள்ள 22 கட்டடங்களுக்குப் பொதுப் பணித் துறையிடமிருந்து அதற்கான* estimate *பெறப்படவிருக்கிறது. எனவே, மூப்பு அடிப்படையிலே, படிப்படியாக, 100 ஆண்டுகளுக்கு மேலாக உள்ள அந்தக் கட்டடங்களுக்குப் புதிய கட்டடங்கள் கட்டித் தரப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 29, மாண்புமிகு உறுப்பினர் திரு.* T.K. *அமுல் கந்தசாமி, மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.*

29—

கல்வி நிறுவனங்கள்

***12048—திரு. T.K. அமுல் கந்தசாமி:**

மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வால்பாறை தொகுதி, ஆனைமலை வட்டம், அருள்மிகு மாசாணியம்மன் திருக்கோயிலின் சார்பாக கலை மற்றும் அறிவியல் கல்லூரி மற்றும் பலவகை தொழில்நுட்பக் கல்லூரி துவக்க அரசு ஆவன செய்யுமா?